# மலையக மக்கள் பிரச்சினை தீர்க்கப்படாத வரை உள்நாட்டு விவகாரத்தில் இந்தியா தலையிடும்

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 31-1-86 வெள்ளி ( தை 18 ஐ. அவ். 20) முழக்கம் 256

## பாராளுமன்றில் பிரதமர் பேச்சு

இலங்கையிலுள்ள நாடற்ற மலையக மக்களின் பிரச்சினை தீர்க்கப்படாத வரையில் உள்நாட்டுப் பிரச்சினைகளில் இந்தியா தலையிடுவதற்கு ஒரு காரணம் இருந்து கொண்டே இருக்கும் என பிரதமர் பிரேமதாஸா பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் தெரிவித்தார். நாடற்றவர்களுக்கு குடியுரிமை வழங்குவது சம்பந்தமான சட்டமூலத்தின் மீது இடம் பெற்ற விவாதத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்த பிரதமர் இதன் மூலம் நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். சுமார் இரண்டு மணித்தியாலம் உரையாற்றிய பிரதமர் நாடற்றவர்களுக்கு குடியுரிமை வழங்கப்படவேண்டுமென்பதை ஆதரித்த திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இப்போது எதிர்ப்பது தனக்கு கவலையளிப்பதாகவும் தெரிவித்தார், எதிர்க்கட்சிகளின் சார்பில் அத்தனகல எம்.பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில், இம் மக்களுக்கு குடியுரிமை வழங்குவதன் மூலம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இரும்புக் ...8ம் பக்கம் பார்க்க

தலவாக்கொல்ல தேயிலைத்தோட்ட புதரிலிருந்து

# துண்டுதுண்டாக வெட்டப்பட்ட கான்ஸ்டபிளின் சடலம் மீட்பு!

## மூன்று பொலிஸார் உயிருடன் கடத்தல் முப்பத்தைந்து கடைகள் முற்ருக தீக்கிரை

(நுவரெலியா)

கடந்த நான்கு தினங்களாக நுவரெலியா மாவட்டத்தில் இடம் பெற்றுவரும் இனமோதலின் விளைவாகக் கண்டதுண்டமாக வெட்டப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் சடலம் தலவாக்கொல்லை தேயிலைத் தோட்டமொன்றின் புதருக்குள் கிடந்து நேற்று மீட்கப்பட்டது. இவருடன் சென்ற மற்றும் மூன்று பொலிஸாரைக் காணவில்லையெனவும், இவர்கள் உயிருடன் கடத்தப்பட்டிருக்கலாமெனவும் அஞ்சப்படுகிறது.

கொல்லப்பட்டவர் அக்கரைப்பத்தனை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தகான்ஸ்டபிள் பிரியந்த டி சில்வா என அடையாளம் காணப்பட்டுள்ளார். பத்துக்கும் மேற்பட்ட துண்டுகளாக; கைவிரல்கள் கூட துண்டிக்கப்பட்டு இவரது சடலம் காணப்பட்டது.

இப்பகுதியில் நேற்றும் நிலைமை கட்டுப்படாததால் மீண்டும் பிற்பகல் மூன்று மணிக்கு பிறப்பிக்கப்பட்ட ஊரடங் —8ஆம் பக்கம் பார்க்க

எட்டுப்பேர் காயம்

## ஹெலிகப்டர் மூலம் முல்லைத்தீவில் தாக்குதல்

(வண்ணார்பண்ணை)

முல்லைத்தீவில் நேற்றுக்காலை ஹெலிகப்டர் மூலம் வந்த ஆயுதப்படையினர் சுமார் ஒரு மணித்தியாலமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனல் படுகாயமடைந்த முல்லைத்தீவைச் சேர்ந்த எஸ். ரமேஷ்குமார் (19) யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உடனடி சத்திர சிகிச்சையளிக்கப்பட்டது.

இச் சம்பவத்தினுல் எட்டுப் பேர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முல்லைத்தீவு மட்டுவாள் பகுதி முழுவதும் பதற்ற நிலை நிலவியுள்ளது. பல குடும்பங்கள் சிதறியோடி அச்சத்துடன் காடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

ஆயுதப்படையினரின் தாக் ...8ஆம் பக்கம் பார்க்க

## முகமூடி தலை அசைத்ததால் வவுனியாவில் இளைஞர் கைது

(வவுனியா)

வவுனியா நகரில் முகமூடி மனிதர்களின் அடையாளம் காட்டுதலின் பேரில் நேற்றும் பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டு இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். கடந்த சில நாட்களாக வவுனியா நகர வீதிகளில் இடம்பெற்றுவரும் முகமூடி மனிதர்களின் நடமாட்டம் காரணமாக மக்கள் வீதியில் நடமாடவே தயக்கம் காட்டுகின்றுர்கள்.

நேற்று முகமூடி மனிதர்களின் அடையாளம் காட்டுதலின் பேரில் கைது செய்யப்பட் —8ஆம் பக்கம் பார்க்க

## தமிழீழ தலைவர்களை பண்டாரி சென்னையில் ஞாயிறு சந்திப்பு

பாரத வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரி எதிர்வரும் 3ம் திகதி கொழும்பு வருவதற்கு முன்னர் தமிழர் கூட்டணித் தலைவர்கள், தமிழீழ விடுதலை இயக்கங்களின் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவார்.

கொழும்பு வரும் வழியில் நாளை சென்னையில் தரிதது, இச் சந்திப்புகளை இவர் நடத்துவார் என்று தமிழக மின் துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இத் தலைவர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொண்டு வரும் பண்டாரி, கொழும்பில் ஜனதிபதி உட்பட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களையும் சந்திப்பார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

டில்லியிலுள்ள இலங்கைத் தூதுவர் திரு. பேர்னுட் திலகரத்தினுவும் இதே காரணத்திற்காகக் கொழுப்பு அழைக்கப்பட்டுள்ளார்.

## சீமெந்து ஆலையின் அதிகாரி கைதாகி பின்னர் விடுதலை

(ஏழாலை காங்கேசன்துறை நிருபர்கள்)

காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன வேலைத்தல முகாமையாளர் திரு. நாகராசா பாதுகாப்புப்படையினரால் நேற்று காபர் வியூ முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின் விடுவிக்கப்பட்டார். பாதுகாப்புச்சேவை ஏ. எஸ். ஓ. திரு. வேலாயுதம் கூட்டுத்தாபன வாசலில் கம்பத்தில் கட்டப்பட்டு பின் அவிழ்த்துவிடப்பட்டார்.

நேற்று முன்தினம் கூட்டுத் ...8ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் தீர்வும், இராணுவத் தீர்வும் ஏககாலத்தில் நடக்கும் என்கிருர் ஜனதிபதி

(சென்னை)

இனப் பிரச்சினையில் அரசியல் தீர்வு காணத்தான் தொடர்ந்து முயற்சி செய்து வருவதாக தமிழக சஞ்சிகை ஒன்றிற்கு இலங்கை ஜனதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தன அளித்துள்ள பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளதாக யு. என். ஐ. தெரிவித்துள்ளது.

அரசியல், இராணுவத் தீர்வு இரண்டையும் தான் இணையானது எனக் கொள்வதாகவும் அரசியல் பிரச்சினைக்கு அரசியல்தீர்வு, இராணுவப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்று அவர் விளக்கமளித்ததாகவும் இது மேலும் தெரிவித்தது.

...8ஆம் பக்கம் பார்க்க

## ரயிலில் வந்த எரிபொருள் இடைநடுவில் பறிபோனது

(ஏழாலை)

நேற்று காங்கேசன்துறை நோக்கிச்சென்ற எண்ணெய் ரயில் மல்லாகம் புகையிரத நிலையத்தில் வைத்து பின்னேக்கிக் கடத்திச்செல்லப்பட்டு சுன்னுகம் புகையிரதநிலையத்தில் வைத்து ஒரு பவுசரில் வந்த எரிபொருள் யாவும் இனந்தெரியாதவர்களால் அபகரித்துச் செல்லப்பட்டது.

நேற்று மத்தியானம் 12 மணிக்கு ஆயுதமேந்திய இனந் ...8ஆம் பக்கம் பார்க்க

## செயலகத்துக்கு 30 மெயில் பை

யாழ்ப்பாணம் செயலகத்துக்கு நேற்று 30 'மெயில்' பைகள் வந்தன. கடந்த புதன் ... 8ம் பக்கம் பார்க்க

## மாங்குளம்கண்ணிவெடிகள் இராணுவத்தால் மீட்பு

(மாங்குளம்)

மாங்குளம் கண்டி வீதியில் மன்னங்குளம் சந்திக்கு அண்மையில் புதைத்து வைக்கபட்டிருந்த இரண்டு கண்ணிவெடிகள் மாங்குளம் முகாமிலிருந்து சென்ற இராணுவத்தினரால் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டது.

கண்டி வீதியில் இராணுவ வாகனங்களைக் கண்டதும் நிறுத்தப்பட்ட லொறி ஒன்றின் சாரதியையும், கிளினரையும் அழைத்துவந்தே இராணுவத்தினர் கண்ணிவெடி ...8ஆம் பக்கம் பாாக்க

தமிழ் பேசும் மக்களின் அபிமானம் பெற்றது ஈழமுரசு

## சூடுபட்டவர் ஆபத்து நிலையில்

(வவுனியா)

கடந்த செவ்வாய் இரவு பதினொரு மணியளவில் பண்டாரிக்குளத்தில் இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய கொள்ளையரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் வவுனியா அரசினர் வைத்தியசாலையில் முத்துசாமி (44) என்பவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## அரபாத் வருவார்

பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் தலைவர் யாசீர் அரபாத் இவ்வருட முற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்வார் என கொழும்பிலுள்ள மேற்படி இயக்க தூதரகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

## நிவாரணம் கோரி தந்தி

(பூநகரி)

பூநகரி- பல்லவராயன் கட்டுப் பகுதியில் வெள்ளத்தினால் அநேக மக்கள் பாதிப்படைந்துள்ளனர். கால்நடைகள் இறந்துள்ளன. பலர் வீடுகளை இழந்துள்ளனர்.

நிவாரணம் வழங்குமாறு பல்லவராயன் கட்டுக் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் திரு. ஆ. இ. கணபதிப்பிள்ளை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரையும் பூநகரி உதவி அரசாங்க அதிபரையும் தந்தி மூலம் கோரியுள்ளார். இப்பகுதியில் நடைபெற்ற ஓர் மரணச்சடங்கிற்கு கூட கட்டுமரம் மூலமே மக்கள் செல்ல வேண்டிய அவல நிலை உருவாகியுள்ளதென்பதையும் தந்தியில் சுட்டிக் காட்டியுள்ளார்

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மேற்கு அரியநாயகன்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கென மூன்று இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய சித்திரத்தேரின் வெள்ளோட்டம் சிறப்பாக நடைபெற்றது. பெருந்திரளான பக்தர்கள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

வெள்ளோட்ட வைபவத்தைத் தொடர்ந்து சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன் தலைமையில் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெற்றன.

புலவர் ஈழத்துச் சிவானந்தன், வித்துவான் பொன் அ. கனகசபை ஆகியோர் சிறப்புரைகளாற்றினர்.

## பிறந்தநாள் வாழ்த்து

✻ துன்னாலை வடக்கு, பாரதிநாதன் கனகாம்பிகை தம்பதியின் மகன் இந்துஜன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✻ நாவாந்துறை, சந்திரகாந்தன் சத்தியபாமா தம்பதியின் மகன் வதனபிரஷாத் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✻ கொல்லங்கலட்டி, சிவபாலன் ஞானேஸ்வரி தம்பதியின் மகன் செந்தில்ருஜன் இன்று தனது நாலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✻ சுன்னாகம் தெற்கு, யோகீஸ்வரன் நிர்மலாதேவி தம்பதியின் மகள் தர்ஷா இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✻ வட்டக்கச்சி, சிவஞானம் இலட்சுமி தம்பதியின் மகன் சிறீரூபன் இன்று தனது பதினொராவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✻ மிருசுவில், நல்லதுரை திரேசம்மா தம்பதியின் மகன் அகிலரட்ணம் இன்று தனது பதின்மூன்றுவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✻ உடுவில் மேற்கு, தேவரட்ணம் இரட்நேஸ்வரி தம்பதியின் மகன் ஆதவன் இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✻ அரியாலை புங்கன்குளம், தவராஜா கமலாதேவி தம்பதியின் மகன் ருபேஷ் இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

## புங்குடுதீவில் பொன் மாலை

(புங்குடுதீவு)

"பொன் மாலைப் பொழுது" என்னும் பல்சுவைக் கதம்ப நிகழ்ச்சி எதிர்வரும் ஞாயிறு (2-2-86) மாலை 6 மணிக்கு புங்குடுதீவு மகா வித்தியாலய அரங்கில் நடைபெறும்.

புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு. ஆர். எஸ். செல்லத்துரை தலைமையில் நிகழும் இவ்வைபவத்தில் புங்குடுதீவு பாடசாலை மாணவர்கள் பங்கு கொள்ளும் பேச்சு, பாட்டு, நடன நிகழ்ச்சிகள் முக்கிய இடம்பெறவுள்ளன.

திரு. கே. எஸ். ராஜா இந் நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிப்பார். பாட்டுக்குப்பாட்டு, டிஸ்கோ நடனம். நாடகம் ஆதியனவும் பொன்மாலைப் பொழுதில் ரசிகர்களுக்குப் பெருவிருந்தாக அமையவிருக்கிறது.




திறப்பு விழா

VINAYAHAR OIL MILL

விநாயகர் எண்ணெய் ஆலை

டச்றோட், சாவகச்சேரி.

01.02.1986 சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு மங்களகரமான திறப்பு விழா வைபவத்திற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தேங்காய் எண்ணெய், பிண்ணாக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள்.

உரிமையாளர்: இ. சுந்தரலிங்கம்
டச்றோட்,
சாவகச்சேரி. R/17303



88 AUGUST

A/L வகுப்புக்கள் ஆரம்பம்

1-02-86 சனிக்கிழமை காலை 11-30 மணி

விபரங்கட்கு:-

New Master Institute

BMC Lane, Jaffna. R / 16386



இல்லத்தரசிகளுக்கோர் நல்ல செய்தி!

இன்று திறப்பு விழாக் காணும்

ஷோபா ஷொப்பிங் சென்ரர்

வழங்கும்

புதிய வசதிகள்! கவர்ச்சியான ஒழுங்குகள்!

Dyn.Ads

காலத்தின் கோலத்தையும், உங்கள் வசதி-பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு வீட்டு விநியோக சேவையொன்றை அறிமுகம் செய்கிறோம். எங்கள் பிரதிநிதி உங்களை வாரத்தின் குறிப்பிட்ட நாட்களில் வந்து சந்திப்பார். அவர் மூலமாக உங்கள் வீட்டுத் தேவைகள் யாவற்றையும் வீட்டிலிருந்தபடியே கேட்டுப் பெறலாம். ஓடர் செய்தவற்றில் வேண்டாத பொருட்களை நீங்கள் திரும்பித் தரக்கூட முடியும். உங்கள் வீடுகளில் டெலிவரி செய்வதற்கு மேலதிக கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

வசதியான இந்தச் சேவையின் பயன்களை நீங்களும் அடையலாம்

நீங்கள் எம்மிலிருந்து 3 மைல்களுக்குள் வசிப்பவரானால்,

இன்றே எம்முடன் பதிவு செய்து கொள்ளுங்கள்

★ நியாயமான விலைகள்

★ தரமான பொருட்கள்

பொருள் கொள்வனவில் புதிய நன்மைகள் காண

எங்கள் வாடிக்கையாளராகுங்கள்

இந்த நட்புறவில் பூரண திருப்தியடைவீர்கள்

Also available: BROILER, CURRY CHICKEN, FISH,
Variety of ICE CREAM,

LP GAS

உங்கள் எல்லாத் தேவைகளையும் ஒரே இடத்தில் நிறைவுசெய்ய

SHOBA SHOPING CENTRE

603, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(நாவலர் சந்திக்கருகே) பி.1041



சந்நிதி

அழகன் வைத்தியசாலை

பருத்தித்துறை செட்டித்தெரு குழந்தை வைத்தியர் டாக்டர் என்.பத்மநாதன் அல்வாய் மாலு சந்தியிலும் (உதவி அரச அதிபர் பணிமனை அருகாமை) கிளை வைத்திய நிலையமென்றை ஆரம்பித்துள்ளார். பருத்தித்துறையில் காலை 7 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும். மாலு சந்தியில் பி. ப. 2 மணி தொடக்கம் இரவு 7 மணி வரையும் வைத்திய சேவைகள் நடைபெறும். R/17302





துர்க்காதேவி துணை
சண்டிகாதேவி துணை

இன்று பருத்தித்துறையில்
மங்களகரமான
திறப்புவிழா

நண்பகல் 12.48-1.38 வரையுள்ள சுபவேளையில்

ராகுலசூரியன்ஸ் புடவை மளிகை

மங்களகரமாகத் திறந்து வைக்கப்படுகின்றது
அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

RAGULASOORIYANS

(உதவி அரச அதிபர் பணிமனை முன்பாக)
பருத்தித்துறை - யாழ். வீதி,
பருத்தித்துறை. R/17301

## உதய சிந்தனை

பொது மக்கள் அபிப்பிராயம் அரசனின் அபிப்பிராயத்துக்கு மாறுபட்டிருக்குமானால், அரசனை அவனது யதேச்சைப்படி நடக்க முடியாதபடி எதிர்க்கவேண்டும்.

-மகாத்மா காந்தி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

31-1-86 வெள்ளிக்கிழமை (குரோதன) தை-18

# இப்படை தோற்கின் எப்படை வெல்லும்

விடுதலை வேண்டிப் போராடும் தமிழீழ மக்கள் அண்மைக்காலத்தில் கண்டிராத சரித்திரம் படைத்திட்ட மாபெரும் ஊர்வலம் நேற்று முன்தினம் யாழ்நகரில் நடைபெற்றது.

அடிமை விலங்கை உடைத்திட தமிழ் மக்கள் எழுச்சி கொண்டு எழுந்த மாபெரும் போராட்டமாக இவ்வூர்வலம் மதிப்பிடுதற்கு உரியது.

வாகன போக்குவரத்துத் தடை, மீன்பிடித் தடை, வீதி திருத்தத் தடை என்ற பல்வேறு சட்டங்களினதும் உச்சாணி நடவடிக்கையாக ஆயிரம் மீட்டர் வலயம் பிரகடனப்படுத்தப்பட்டது.

தமிழீழத்தில் நடைபெறும் படுகொலைகளை நியாயப் படுத்தவே இப்புதிய வலயப் பிரமாணம் கொண்டுவரப்பட்டது.

அரச பயங்கரவாதத்தை ஜனநாயக உலகின் கண்களிலிருந்து மூடிமறைப்பதற்காகவே இச்சட்டம் கொண்டுவரப்பட்டதென்பதை அனைவரும் அறிவர்.

கொலை, கொள்ளை, தீ வைப்பு, நிர்மூலம், வெளியேற்றம் ஆகிய பஞ்ச கிருத்தியங்களையும் தமிழ் மண்ணில் தங்கியிருந்து புரிந்து வரும் ஆயுதப்படையினரை எதிர்த்துப் போராட வேண்டிய நிலை தமிழ் இளசுகளுக்கு இன்று ஏற்பட்டுள்ளது.

ஆயுதத்தை ஆயுதத்தால்தான் சந்திக்கவேண்டும் என்ற நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டதால் போராட்டம் சர்வதேச மட்டத்தில் கவனத்தை ஈர்த்தது.

இதனால் தமிழ் இளைஞர்களுக்கு ''பயங்கரவாதிகள்'' என்று அரசாங்கம் கௌரவப்பட்டம் சூட்டியது.

ஆயுதமும் ஆயுதமும் மோதிக்கொள்ளும் அதே வேளையிலும், தமிழ் மக்கள் சாத்வீகப் போராட்டத்தின் நம்பிக்கையை முற்றுமுழுதாக இழந்து விடவில்லையென்பதைக் கடந்த சில தினங்களாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் 'மறியல்' போராட்டங்கள் நிருபிக்கும்.

அகிம்சாமூர்த்தி, அண்ணல் மகாத்மா காந்தி, காட்டிய பாதையில் தமிழ்ப் பகுதிகளில் அடுத்தடுத்து இடம்பெற்று வரும் சாத்வீகப் போராட்டங்களில் மக்களின் பங்களிப்பு இப்போது நிறைவாகிவருவது கண்கூடு.

நேற்று முன்தினம் நகரில் இடம்பெற்ற மக்கள் எழுச்சி ஊர்வலம், தற்போதைய போராட்டத்தின் முக்கிய மைல் கல்லாகும்.

மக்கள் கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்கலாம்; ஏற்காது விடலாம். அது வேறு விஷயம்.

ஆனால் மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தவும், அவர்களிடையேயிருக்கும் சிறு சிறு வேறுபாடுகளைக் களைந்தெறியவுமாவது இப்போராட்டம் உதவுமென்பது எமது நம்பிக்கை.

மக்களின் நேரடிப் பங்களிப்பு இல்லாத எந்தப் போராட்டமும், வெகுஜன போராட்டமாக பரிணமிக்க முடியாது.

மக்களை இணைத்துக்கொண்டும், பக்குவமாக அணைத்துக் கொண்டும் செல்வதன் மூலமே, போராட்ட உணர்வும், இன விடுதலையின் முக்கியத்துவமும் குத்திட்டுத் தெரியவரும்.

இந்த வகையில், நேற்று முன்தினம் யாழ்நகரில் இடம் பெற்ற வரலாற்றுப் பெருமை பெறும் ஊர்வலம், முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

சின்னஞ் சிறுரிலிருந்து, கைம்பெண்களான வயோதிப மாதுக்கள் வரையானவர்களும், எந்தவிதமான வேறுபாடுமின்றி இவ் ஊர்வலத்தில் பங்குபற்றியமை இதன் சிறப்பம்சங்களில் மற்றொன்றாகும்.

''இப்படை தோற்கின், எப்படை வெல்லும்'' என்று துணிந்து சொல்லுமளவுக்கு, சீராகவும், சிறப்பாகவும் நடத்தப்பட்ட ஊர்வலத்தின் அமைப்பாளர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள்.

இந்த ஒற்றுமை தொடர்ந்திருக்குமானால், தமிழினம் மாற்றான் எவருக்கும் மண்டியிடவேண்டிய தேவை என்றும் ஏற்படாது.

## தமிழீழப்போராட்டம் வெற்றிபெற

# சாப்பாடு, நகை, வாகனங்கள் வழங்கினால் மட்டும் போதாது!

## தெருக்கூத்து முடிவில் டேவிட்சன் பேச்சு

(வண்ணார்பண்ணை)

ஆயுதப் போராட்டங்களின் பரிணம வளர்ச்சியே மக்கள் போராட்டம், எனவே மக்கள் அனைவரும் வெகுஜன அமைப்புகளுடன் சேர்ந்து போராட்டங்களில் பங்கெடுக்க வேண்டும். சர்வாதிகார வெறிபிடித்த ஜெயவர்த்தன அரசாங்கம் தமிழ் பேசும் மக்களுக்கு எதுவித உரிமைகளையும் வழங்கப்போவதில்லை. இதனால் மக்களோடு மக்களாகவே நாம் போராட வேண்டும்.

ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் பேச்சாளர் திரு. டேவிட்சன் இவ்வாறு யாழ். பஸ் நிலையத்தில் நடந்த தெருக்கூத்தின் முடிவில் பேசும் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும் போது, போராடும் இளைஞர்களுக்கு சாப்பாடுகள் வழங்கி விட்டோம் நகைகள் கொடுத்துவிட்டோம், வாகனங்கள் வழங்கி விட்டோம் ஆகவே நாமோ நமது பிள்ளைகளோ போராட வேண்டிய அவசியமில்லை. நமது முன்னேற்றங்களுக்கு வழிபார்ப்போம் என்ற அற்ப உணர்வுகள் மாறி போராளிகளுடன் சேர்ந்து போராட்டத்திற்கு தயாராக வேண்டும்.

பிரிட்டன், அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய நாடுகளிடம் சிறிலங்கா அரசாங்கம் மண்டியிட்டு ஈழ போராளிகளுக்கும், ஈழ மக்களுக்கும் எதிராக ஆயுதங்களை குவித்து வருகின்றது. எனவே மக்களே இயக்கங்கள் அனைத்தையும் ஒன்று சேர்க்க வேண்டும். ஒரு ஸ்தாபன மயப்படுத்தப் படவேண்டும். போத்தல்கள் கொண்டும், மூங்கில் தடிகள் கொண்டும் போராட்டங்களை நடத்திய நாடுகளும் உண்டு. அந்த உணர்வும் தமிழ் பேசும் மக்களுக்கும் ஏற்படவேண்டும் என்று சொன்னார்.

## வைரவர் ஆலய நிர்வாகஸ்தர்

(சங்கானை)

சங்கானை – கிழக்கு - நிகரை அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய பரிபாலன சபை நிர்வாகிகள் விபரம் பின்வருமாறு;

தலைவர்:- திரு. ஆ. ஞானசேகரம், செயலாளர்:- திரு-மு. நவரத்தினராசா, பொருளாளர்:- திரு. செ. சிவஞானம், உப-தலைவர்:- திரு. கே. எம். நடராசா, உப-செயலாளர்:- திரு. சி. சுந்தரலிங்கம், நிர்வாக சபை உறுப்பினர்களாக அறுவர் தெரிவாகினர்.

மேற்படி ஆலயத் திருப்பணி வேலைகள் துரிதகதியில் நிறைவு பெற்று வருகின்றன. மிகவிரைவில் மகா கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கும் ஆலய வீதியில் அண்மையில் மாபெரும் மரம்நாட்டு விழாவும் நடைபெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## மகாசிவம் மகிழ்ச்சி

# தமிழீழ விடுதலைப் போரில் ஆசிரியர்கள் பூரணபங்கு

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அழைப்பினை ஏற்று தமிழ் ஆசிரியர் உலகம் தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தில் மீண்டும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டமைக்கு சங்கம் தனது நன்றிறைத் தெரிவித்துக் கொள்கின்றது. என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயம் உட்பட இன்றைய சகல நெருக்கடிகட்கும் தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்பை முழுமையாக வெளிப்படுத்தும் நோக்குடன் தொழிலாளர் நடாத்திய பேரணியில் கலந்து கொண்ட அனைவருக்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது நன்றியைத் தெரிவிக்கின்றது. ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்ட இப்பேரணியில் பெண் ஆசிரியர்கள் பெருந் தொகையாக கலந்து கொண்டமையையும் சங்கம் இச் சந்தர்ப்பத்தில் பெருமையுடன் சுட்டிக் காட்ட விரும்புகின்றது என்று அவ்வறிக்கையில் த. மகாசிவம் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இத்தகைய பேரணியினை செப்டெம்பர் திங்களில் நடாத்தியமை குறிப்பிடத்தக்கது. இன்று தமிழ் ஆசிரிய உலகில் ஏற்பட்டுள்ள விழிப்பும், எழுச்சியும் போராட்ட உந்து மனப்பான்மையையும் தொடர வேண்டும் என்று இவ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## அன்னையர் முன்னணித் தலைவி பேச்சு:

# எமது போராட்டம் சில நாட்களின் பின் வேறுவடிவத்தில் பரவலாக நடைபெறும்

இராணுவ முகாம்களைச் சுற்றி பாதுகாப்பு வலயம் அமைப்பதும் அப்பகுதிகளில் பெரும் ஆயுதங்களைப் பயன்படுதத அனுமதி அளித்திருப்பதும் மனித உரிமைகளை சிறிதளவாவது மதிக்காத போக்காகும். இலங்கை அரசாங்கத்தின் இம்மனித விரோதச் சட்டங்கள், பாசிஸ சட்டங்கள் போலக் கொடியவை. உண்மையான புரிந்துணர்வும் ஆர்வமும் இருப்பின் மிக இலகுவாகத் தீர்த்து வைக்கக் கூடிய இனப்பிரச்சினையை மிக மிகச் சிக்கலாக்கி வளர்த்து விட்டது. இந்த அரசாங்கம். இதை மேலும் மேலும் சிக்கலாக்கி அவிழ்க்க முடியாத முடிச்சாக இங்கு விதிக்கப்பட்டிருக்கும் கொடிய சட்டங்கள் போன்றவை உதவுகின்றன என்று அன்னையர் முன்னணித்தலைவி தேம்பா குணநாயகம் தெரிவித்தார்.

இத்தகைய சிறிதும் மனிதாபிமான மற்ற வகையில் அப்பாவி மக்களின் உயிர் வாழும் உரிமைக்குச் சவால் விடுகின்ற இத்தகைய சட்டங்களைக் கண்டும் காணமல் இருக்க முடியாது. மனச்சாட்சி சிறிதளவு தானும் உள்ளவர் எவரும் இதற்கு எதிர்ப்பினைத் தெரிவிக்காமலும் இருக்க முடியாது. இன்று இப்பிரதேச மக்களிடம் இருக்கும் எதிர்ப்புணர்வை அறிந்தே அன்னையர் முன்னணி போராட்டத்தைத் தொடங்கியது. பொது மக்களின் எதிர்ப்புணர்வை ஓரளவுக்காவது இப்போராட்டத்தின் மூலம் நாம் ஒருமைப்படுத்தியிருக்கின்றோம். இப்போராட்டத்தின் ஒரு நல்ல விளைவு என்று இதனைக் கூறலாம். அன்னையர் முன்னணியினரால் அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்ட மகஜருக்கு அமைச்சரிடமிருந்து உத்தியோக பூர்வமான பதில் இன்னும் கிடைக்கவில்லை எனவும் அவர் சொன்னார்.

ஆனால் இந்தக் கட்டத்தில் தற்காலிகமான நடு இடைவெளி இப்போராட்டத்திற்குத் தேவை என நாம் உணர்கிறோம். பொதுமக்களின் அலுவல்கள் பல்வேறு சிரமங்களுக்குள்ளாகியிருக்கும்இக்கால கட்டத்தில் அவற்றுக்குமேலும் அசௌகரியங்கள் தொடர்ச்சியாக ஏற்படுத்த நாம் விரும்பவில்லை. மேலும் உணவு விநியோகம் போன்ற அத்தியாவசிய சேவைகள் சீராக நடைபெற வேண்டும். இவற்றில் இடைஞ்சல் ஏற்படுவதால் ஏழை மக்களின் வாழ்க்கை சிறிதளவாவது பாதிக்கப்படுவதை விரும்பவில்லை. இதனாலேயே சில தினங்களுக்கு மறியலை இடைநிறுத்த முடிவு செய்தோம். ஆனால் சில நாட்களின் பின் மீண்டும் இதனை வேறு வடிவத்தில் தொடரவே உள்ளோம் என்றும் அவர் சொன்னார்.

## இவ்வேலைகளும் ஸ்தம்பிதம்

(சுண்டுக்குளி)

அன்னையர் முன்னணியினர் மேற்கொண்டுவரும் மறியல் போராட்டத்தினால் தேசிய வீடமைப்புச் செயலகத்திலுள்ள பல அரச அலுவலகங்களும் இரண்டாவது தினமாக ஸ்தம்பிதமடைந்துள்ளன. யாழ். செயலகத்தின் முன்னால் பந்தல் ஒன்று போடப்பட்டு அதன் கீழ் அமர்ந்தபடி அன்னையர்முன்னணியைச் சேர்ந்த பெண்களும், மாணவிகளும் மறியல் போராட்டம் நடாத்தி வருகின்றனர்.

இதே சமயம் யாழ். செயலகத்திற்கருகிலுள்ள தேசிய வீடமைப்புச் செயலகம் முன்னாலும் அன்னையர் முன்னணி மறியல் போராட்டம் மேற்கொண்டுள்ளது. இதனால் இச்செயலகத்திலுள்ள இலங்கைப் பனம்பொருள் அபிவிருத்திச்சபைத் தலைமைக் காரியாலயம், தேசிய வீடமைப்புத் திணைக்களம், வனபரிபாலன இலாகா, இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச்சபைபிரதேசஅலுவலகம், விலைமதிப்புத் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம், வாடகைச் சபை, தேசிய இளைஞர் சேவை மன்றம் ஆகியனவும் மூடப்பட்டுள்ளன.

# காரைநகர் கருங்காலி போசுட்டி அருள்மிகு ஸ்ரீ மு

## மகா கும்பாபிஷேக (31-1-19

★ ★ சிறப்பும

## கோபுர தரிசனம் கே


அவன் அனுக்கிரகம்
அனைவர்க்கும் கிட்டுவதாக

நாளுக்கு நாள் மாறும் நவநாகரிக
பட்டுப் பிடவைகள்
திருமண வைபவங்களுக்கேற்ற
கூறைச் சேலைகள்
பட்டு வேட்டிகள்
ஏனைய நவீன சாறிகள்
ஆடவர் விரும்பும் அழகிய சேட்டிங், சூட்டிங்
சிறுவர் சிறுமியர் யாவரையும் கவரும்
ஆடை வகைகள் அனைத்திற்கும்
யாழ்ப்பாணத்தில் சிறந்த புதிய ஸ்தாபனம்

**மகாராணி ரெக்ஸ்ரைல்ஸ்**

50, பெரியகடை
யாழ்ப்பாணம்.

"இன்னல் சூழ்ந்த இக்காலத்தில்
தமிழ் இனத்தை முருகன் காப்பாற்றுவாராக"

**சிவகணேசன் ஸ்ரோர்ஸ்**

41, பெரியகடை;
யாழ்ப்பாணம்

சிவகுமார் ஸ்பெசல் அப்பளம்
தயாரிப்பாளரும் விற்பனையாளரும்

**சிவகுமார் ஸ்ரோர்ஸ்**

282, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி:- 23738

அழகு வர்ணங்கள் புதுமை டிசைன்கள் நாளுக்கு நாள்
மாறும் பிடவைத் தினிசுகளுக்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்

**குமரன் ரெக்ஸ்ரைல்ஸ்**

148, நவீன சந்தை,
மத்திய வீதி
யாழ்ப்பாணம்


இலங்கையின் வடபால் சிவ நெறியும் சைவசீலமும் தமிழ் மணமும் சிவதர்மமும் இறை சிந்தையும் கொண்ட நிறை மாந்தர் வாழும் யாழ்ப்பாணத்தின் அங்கமாக மேல் திசையில் வரையாது வாரி வழங்கும் வள்ளல்களும், கல்விமான்களும் நிறைந்த காரை நகரின் கண்ணே கருங்காலி என்னும் பதியில் அடியார்கள் வல்வினை அகற்றி வாழ்வளிக்கும் கருணைக்கடலாக கடப்ப மரத் தென்றலில் வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமான் கோவில் கொண்டு எழுந்தருளியுள்ளார்.

எமது நாடு பண்டைக் காலத்தில் ஏனைய நாடுகளுடன் புராதன வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்தபோது ஊர்காவற்றுறை சிறந்த இயற்கைத் துறைமுகமாக விளங்கியது. இங்கு வந்திருக்கும் வணிகர்கள் காரைநகரினூடாகவே தமது பிரயாணத்தை மேற்கொண்டனர். இந்த வணிகர்களே துறைமுகத்திலுள்ள சித்திர கூடம் சித்தி விநாயகரையும், கருங்காலியிலுள்ள போசுட்டி முருகனையும் ஸ்தாபித்து வழிபட்டு வந்திருக்கலாமென நம் முன்னோர் மத்தியில் ஒரு கருத்து நிலவுகிறது.

காலப்போக்கில் குஞ்சு விதானையார், பொட்டு உடையார் போன்றவர்கள் இவ்வாலயத்தின் வளர்ச்சியிலும் பரிபாலனத்திலும் அதிக அக்கறை செலுத்திவந்தார்கள்.

முருகமூர்த்தி மூலஸ்தானத்தின் பின்புறமாகத் தென் மேற்கு மூலையில் தல விருட்சமாக அமைந்து விளங்குவது கடப்பமரமாகும். தேவர்களுடைய முடிகளையும், பக்தர்களுடைய கடப்ப மலர் மாலைகளையும் தன் திருவடிகளுக்கு அணிகலன்களாக ஏற்றுக் கொண்ட முருகமூர்த்தி தன் திருக்கரத்தில் ஞான சக்தியாகிய வேலை வைத்திருக்கிறார். முருகனைத் தொழாவிட்டாலும் அவன் வேலைத் தொழுதால் போதுமானது.

"கட்டுண்ட சொல்லியர்
மெல்லியர்
காமக் கலவாக் கள்ளை
மொட்டுண்டு அயர்கினும்
வேல் மறவேன்."

—என்பது அருணகிரிநாதரின் அருள் வாக்கு. வேலையே முருகனாக ஆவாகனம் பண்ணி வழிபடும் வழக்கம் இன்றும் பல இடங்களில் இருந்து வருகின்றது. ஆறுமுகமுடைய முருகனைப் போலவே வேலுக்கும் ஆறு பட்டைகள் உண்டு.

ஈழத்துச் சிதம்பரத்தில் தல விருட்சகமாக அமைந்து பல நூற்றாண்டுகளாக இரண்டாம் வீதியில் உள்ள அரச மரமும் அதன் கீழ் எழுந்தருளியிருக்கும் சிவஞான வைரவரும் அடியார்களுக்கு அருள் பாலித்து வருவது அனைவரும் அறிந்ததே. கருங்காலி முருகனடியார்கள் முன்னை நாள் தர்மகர்த்தா திரு. வே. கந்தசாமி அவர்களின் அனுசரணையுடன் வேலைப் பிரதிட்டை செய்வதற்கான ஆயத்த வேலைகளை ஆரம்பித்தார்கள்.

அதன் பின் கடப்பமரத்தின் கீழ் 1973ம் ஆண்டிலிருந்து தர்மகர்த்தா திரு. கா. சபாரத்தினம் அவர்களின் ஆதரவுடன் வேலைப் பிரதிட்டை செய்து ஆண்டு தோறும் தைப்பூசத் திருநாளில் வேலுக்கு அடியார்கள் பொங்கிப் படைத்து விழாவெடுத்து வருகின்றனர். இக் கட்டத்தில் அமரர் சு. தம்பாப்பிள்ளை அவர்களையும் நினைவுகூர்வது பொருத்தமானது. கடந்த வாரமும் தைப்பூசத் தினத்தன்று பெருமளவு அடியார்கள் முருக வேலுக்குப் பொங்கல் பூசை செய்ததைக் காணமுடிந்தது.

காரைநகர் சிவன் கோவிலுக்கு ஈழத்துச் சிதம்பர புராணமும் திக்கரை முருகமூர்த்தி கோவிலுக்குத் திக்கரை அந்தாதியும், தன்னைப் பிள்ளையார் கோவிலுக்குத் தன்னை அந்தாதியும், மணற்காடு முத்துமாரி அம்பாளுக்கு திருவூஞ்சல் என்ற நூலும் அணி செய்வது போல கருங்காலி முருகமூர்த்தி கோவிலுக்கும் இரண்டு நூல்கள் சிறப்புச் செய்கின்றன.

கி. பி. 18-ம் நூற்றாண்டிற் கோதாவரியிலிருந்து வந்து காரைநகரிற் குடியேறிய மேருகிரி முனிவரின் வழித்தோன்றலான கார்த்திகேயப் புலவரால் இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன்னர் பாடப்பட்ட திருப்போசை வெண்பாவும் ஒன்று. இங்கு போசுட்டி என்பதே மருஉப்பெயராகப் போசை என வழங்கப்பட்டி



ருக்கிறது. (வல்வெட்டித்துறை -வல்வை எனவும், வண்ணார் பண்ணை - வண்ணை எனவும் வழங்கப்படுவதுபோல போசுட்டி என்ற இடமும் போசை என வழங்கப்படுவதாயிற்று)

கார்த்திகேயப் புலவரின் திருப்போசை வெண்பாவிலிருந்து ஒரு பாடல்:

வாக்கினியல் வித்தகரும்
வாணிகஞ்செய் வர்த்தகரும்
தூக்கிற் பொருள் பகருந்

தொல் ... புரந்த ... பொற் ... பரந்த ...

அடுத் ... கவி திரு ... அவர்கள் ... 'கடப்ப ... பதிகமா ... சுவை நி ...

இற்ற ... டுகளுக்கு ... யத்தில் ...

அர்ச்ச ... மாக ... தண்ட ...

இவ் ... நடந்த ... ருந்து ... காலில் ... காலம் ... கப் பெ ... சென்


புடவை மொத்த சில்லறை வியாபாரிகள்

**ஏ. வி. பி. ரெக்ஸ்ரைல்ஸ்**

119/6, மைலன்ஸ் பில்டிங்
கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்

"ஜவுளி உலகின்
நவீன முன்னோடிகள்"

**ரஞ்சனாஸ்**

17, 18, 18. A நவீன சந்தை
யாழ்ப்பாணம்
தொலைபேசி:- 8015

சகலவித பிடவைத் தினிசுகள், கூறைச் சேலைகள்,
ஆண், பெண் அனைவருக்கும் ஏற்ற றெடிமேட்
ஆடைகளுக்கும்

**மணியம்ஸ்**

15, நவீன சந்தை
யாழ்ப்பாணம்

"யாழ்நகரில் தனித்துவம் மிக்

**விமாகி**

27/3, மின்சார நிலை
யாழ்ப்பாணம்

உங்களுக்கு விருப்பமான ஜவுளி
பாட்டா பாதணிகளையும் தெரிவு
சிறந்த ஸ்தாபன

**யாழ். சென்றல்**

11, நவீன சந்
ஆஸ்பத்திரி வீ
யாழ்ப்பாணம்

கடம்பக் கந்தா
கருணை பொழிவாய்"

**கணபதி ஸ்**

18, கஸ்தூரியார்
யாழ்ப்பாண

ஞீ முருகமூர்த்தி கோவில் பஞ்சதள இராஜகோபுர
1-1-1986) வெள்ளிக்கிழமை

# புமலர் ★ ★


## ம் கோடி புண்ணியம்

சிறப்புச்
ற்றுண்டிற்
வந்து
றிய மேரு
றித்தோன்
பப் புலவ
று வரு
பாடப்
வெண்பா
போசுட்டி
பயராகப்
ங்கப்பட்டி

தொல்போசை - நோக்கிற்
புரந்தகனன் கண்ணிற்
பொறியாருய்ப் போந்து
பரந்த கனலாஞன் பதி

அடுத்து அளவையூர் அருட் கவி திரு. சி. விஞசித்தம்பி அவர்களால் பாடப் பெற்ற '.கடப்பநிழல் கந்தவேல் திருப் பதிகமாகும்'' இது பக்திச் சுவை நிறைந்த நூலாகும்.

இற்றைக்கு அரை நூற்றுண் டுகளுக்கு முன்னர் இவ்வால யத்தில் பூசை செய்து வந்த



டித்துறை
வண்ணுர்
எனவும்
போல
இடமும்
ங்கப்படுவ

லவரி
ண்பாவி

ந்தகரும்
ர்த்தகரும்
பகருந்

அர்ச்சகர் ஒருவர் முறையீன மாக நடந்து முருகனிடம் தண்டனை பெற்ருர்.

இவ்வர்ச்சகர் முறையீனமாக நடந்தமையால் ஆலயத்திலிருந்து இடை நிறுத்தப்பட்டு காலில் வாதம் ஏற்பட்டு பல காலம் வருந்திப் பின்னர் முருகப் பெருமானிடம் தவழ்ந்து சென்று மன்னிப்புக் கேட்டுப் பூசைசெய்து குணமடையப் பெற்ருரெனக் கூறப்படுகிறது.

இவ்வாலயத்தில் வருடந்தோறும் சித்திரை மாதத்தில் கொடியேற்றத் திருவிழா பத்து நாட்கள் சிறப்பாக நடைபெறுகிறது. சித்திராப் பெ ர்ணமி தினத்தில் தீர்த்தோற்சவம் நிகழும். இங்கு நடைபெறும் திருவிழாக்களுள் கார்த்திகைத் திருவிழா சிறப்பானது. திருவிழாக் காலங்களில் ஸ்ரீ சண்முகாநந்தா சபையினர் சமயப் பெரியார்களையும் சைவ அறிஞர்களையும் அழைத்து சொற்பொழிவுகளை நடாத்துவார்கள். இச்சபையினர் திருவிழா நடைபெறும் பத்து நாட்களிலும் தண்ணீர்ப் பந்தல் அமைத்து அடியார்களுக்குத் தாக சாந்தியளிப்பார்கள்.

காரைநகரிலேயே முதலாவது சித்திரத்தேர் அமையப் பெற்ற சிறப்பு இவ்வாலயத்திற்கே உரியது. பல இலட்ச ரூபா செலவில் 1974இல் புதிய சித்திரத்தேரும், தேர்முட்டியும் அமைக்கப்பட்டன.

இற்றைக்கு நாற்பது வருடங்களுக்கு முன்னர் இராஜகோபுரத்திற்கு அத்திபாரமிடப்பட்டு கடந்த ஐந்தாண்டுகளாக வியாழவரியிலிருந்து தூபி வேலைகள் காரைநகரின் கொடைவள்ளல்களான தனவந்தர் சிலரின் தளரா முயற்சியாலும் முருகனடியார்களின் ஊக்கத்தாலும் துரிதமாக நடைபெற்று முருகன் திருவருளால் இராஜகோபுரவேலைகள் இனிது நிறைவேறியுள்ளன.

கடம்பமரத் தென்றலில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் வள்ளி தேவசேன சமேத முருகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகட்கும் புதிதாக நிர்மாணிக்கப் பெற்ற சனீஸ்வரர், சண்டேஸ்வரர், ஆகிய மூர்த்திகட்கும் அன்பர்களின் அருளே ஒரு வடிவானதோவென விதந்து கூறற்பாலதாகிய பஞ்ச தளங்களைக் கொண்ட இராஜகோபுரத்திற்கும் இன்று (31-1-86) வெள்ளிக்கிழமை காலை 9.12 மணி முதல் 9.48 மணி வரையுள்ள மீனலக்கின சுபவேளையில் மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுகிறது.

இந்த இராஜகோபுரம் மகாபலிபுரச் சிற்பக்கலைக் கல்லூரியில் பயிற்சி பெற்ற ஸ்தபதி திரு. த. இரமணன் அவர்களாலும், அராலியூர் ஸ்தபதி திரு. க.நவரத்தினம் அவர்களாலும் நிர்மாணிக்கப்பட்டது.

சிற்ப வேலைகள் தஞ்சாவூர் திரு. பன்னீர்ச் செல்லன் திரு. நாகராசா ஆகியோரின் கை வண்ணத்தில் சிறப்புற வடிக்கப்பெற்று அழகாகக் காட்சியளிக்கின்றன. இக்கும்பாபிஷேகத்தை அரியாலையூர் பிரதிஷ்டா வித்வஜோதி சிவ ஸ்ரீ இ. சுப்பிரமணியக் குருக்கள் பிரதம குருவாக இருந்து நடாத்துவார். சர்வபோதகமாக ஈழத்துச் சிதம்பர பிரதமசிவாச்சாரியார், சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக் குருக்கள் கடமையாற்றுவார்கள்.

அண்மைக் காலங்களில் ஏற்பட்டது போன்ற அனர்த்தங்கள் இனியும் ஏற்படக் கூடாதென வேண்டி காரைநகர் மக்கள் இக்கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நடத்துகிருர்கள். எல்லோருக்கும் காரைநகர் கருங்காலி போசுட்டி முருகன் நல்லருள் கிடைக்க வேண்டுவோமாக.

**ந. கணேசமூர்த்தி**
(நமது காரைநகர் நிருபர்)


கடம்பக் கந்தனை வணங்கி
கடவுள் அருள் பெறுவோம்

கடம்பக் கந்தனை வணங்கி
கடவுள் அருள் பெறுவோம்
இராஜகோபுர கும்பாபிஷேகம்
சிறப்புற வாழ்த்தும்
**வியாவில் சனசமூகநிலையத்தினர்**
காரைநகர்.

சீமாட்டி
Seemati
கந்தக் கடவுளே
களிப்புமிகு வாழ்வுதனை
அருள்வாய்
**சீமாட்டி**
122, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்
கிளைகள்:-
சீமாட்டி பான்சிகுட்ஸ் அன்பாம் உற்பத்திகள்
159, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
சீமாட்டி
இல, 8, நவீனசந்தை சுன்ஞகம்.

அத்தியாவசிய ஆடம்பர அன்பளிப்புப் பொருட்கள்
மங்கள, அமங்கல கிரியைச் சாமான்கள் யாவற்றையும்
நிதான விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
**ஸ்ரீ முருகன்ஸ்**
சிவன் கோவில் வீதி
காரைநகர்

நவீன நாகரீகத்திற்கு ஏற்ற நங்கையர் ஆடவர்
அனைவரும் விரும்பும் ஜவுளித் தினிசுகளுக்கு
நாடுங்கள்
**சங்கீதா**
180, நவீன சந்தை
யாழ்ப்பாணம்

''முருகனின் கும்பாபிஷேகம்
சிறக்க வாழ்த்துகிருேம்''
**நியூ சிவாயம்ஸ்**
58, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

'' இந்த அவனியில் உனையன்றி
துணை ஏது முருகா''
**விஞயகர் ஸ்ரோர்ஸ்**
166, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

''உனைத் தொழுவதொன்றே
வாழ்வில் யாம் பெற்ற இன்பம்''
**ஈ. எஸ். பேரம்பலம்**
சைக்கிள் வியாபாரிகள்
50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

தனித்துவம் மிக்க ஸ்தாபனம்''
**விமாகி**
, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்

உங்களுக்குத் தேவையான பிடவைத் திணிசுகளுக்கு
யாழ்நகரில் நம்பிக்கையான ஸ்தாபனம்
**பரீஸ் ரெக்ஸ்**
153, மின்சார நிலைய வீதி
(பஸ் நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்
தொலைபேசி 23863

விருப்பமான ஜவுளி வகைகளையும்
ணிகளையும் தெரிவுசெய்ய யாழ்நகரில்.
சிறந்த ஸ்தாபனம்
**சென்றல் ரேடஸ்**
11, நவீன சந்தை
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

வேலுண்டு வினை தீர்க்க
மயிலுண்டு எமைக்காக்க
**வளர்மதி ஸ்ரோர்ஸ்**
27, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்

டம்பக் கந்தா
ருணை பொழிவாய்''
**ணபதி ஸ்ரோர்ஸ்**
18, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்


## ''நன்றி நவில்கிறேம்''

''முருகனின் திருப்பணி வேலைகளை வெற்றிகரமாக முடித்து இன்று கும்பாபிஷேகத்தைக் காண்பதற்கு சகல வழிகளிலும் வாரி வழங்கி உதவி புரிந்த அன்பர்கள் அடியார்கள் அனைவருக்கும், விளம்பரங்களைத் தந்து மலரைச் சிறப்பிக்கும் வர்த்தகப் பெருமக்கள் அனைவருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

க. சோமசேகரம்,
செயலாளர்,
போசுட்டி முருகன் கோவில் திருப்பணிச்சபை.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் விசுவலிங்கம் பேச்சு:

# வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு தற்போது 67,000 தமிழர்கள் அகதிகளாக வந்துள்ளனர்

'பாதிக்கப்பட்ட அகதிகள் நிலையும் மக்கள் பங்களிப்பும்' என்ற தலைப்பில் நவாலியில் சமீபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு.கா. விஸ்வலிங்கம் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இப்போது சுமார் அறுபத்தேழாயிரம் தமிழர்கள் அகதிகளாக இருப்பதாகத் தெரிவித்தார்.

திருமலை மாவட்டத்தில் 28,028 பேர் 56 முகாம்களிலும், வவுனியாவில் 5,595 பேர் 20 முகாம்களிலும், முல்லைத்தீவில் 5,254 பேர் 15 முகாம்களிலும், மன்னாரில் 2,318 பேர் நான்கு முகாம்களிலும், கிளிநொச்சியில் 1,672 பேர் நான்கு முகாம்களிலும், யாழ்ப்பாணத்தில் சுமார் 20,000 பேரும் அகதிகளாக இருப்பதாக அவர். தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வுக்காக இதுவரை பெருமளவு நிதி செலவிடப்பட்டுள்ளது. இதற்கான நிதி பெருமளவில் வெளிநாடுகளிலிருந்தே பெறப்பட்டது. இவ் வேலைகளைத் தொடர்ந்து செய்வதற்குள் எமது மக்களும் பெருமளவில் நிதி உதவி செய்ய வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

திருமலையில் முந்நூறு குடும்பங்களுக்கு நூற்றுஐம்பது, நூற்றுஐம்பதாக இரு திட்டங்களில் வீடமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இக்குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் நானூறு ரூபா மாதாந்தம் கொடுக்கப்படுவதுடன் வேறு வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. இங்கு 46 முதலுதவி நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நவாலி பிரஜைகள் குழுத் தலைவர் திரு. சி. ஜே. இளையதம்பி கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையில், திருமலைக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட ஐம்பத்தெட்டுப் பேருக்கு தமது ஊரில் தஞ்சமளிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களைப் பராமரிப்பதற்கு வை.எம்.சி.ஏ யினதும், தென்னிந்திய திருச்சபையினதும், ஆதரவும் கிடைப்பதாகவும் கூறினார்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழக பிரச்சாரப் பிரிவைச் சேர்ந்த திரு.ஆ. கனகசபாபதியும் இங்கு உரையாற்றினார். திரு. ஜே. சின்னத்துரை நன்றி உரை நிகழ்த்தினார்.

## மாணவ லயன்ஸ் சேவைகள்

(காங்கேசன்துறை)

மாணவ லயன்ஸ் கழகத்தினர் சென்ற மாதம் மக்களுக்கு உதவும் பொருட்டு நீரிழிவு நோய் பற்றிய கருத்தரங்கை நடத்தினார்கள். 26ம் திகதி இலவசமாக கண் பார்வை குறைந்தவர்களுக்கு கண்ணாடி வழங்கும் நோக்கமாக கண் பரிசோதனை நடத்தினார்கள். கண் வைத்திய நிபுணர்கள் வேலாயுதபிள்ளை, அனுஸ் ஆகியோர் பரிசோதனை நடத்தினார்கள். 100க்கும் அதிகமானோர் பரிசோதனைக்கு சமுகமளித்தனர். பரிசோதனை நடைபெற்று ஒவ்வொருவருக்கும் காட் கொடுக்கப்பட்டது. இவர்களுக்கு பின் கண்ணாடிகள் வழங்கப்படும்.

இணுவில் சமாதான சபைமூலம்

## கால் நூற்றாண்டு சச்சரவு சுமுகமான நிலையில் தீர்வு

(ஏழாலை)

கடந்த இருபத்தேழு வருடங்களாக யாழ். மாவட்ட, மல்லாக மாவட்ட நீதிமன்றங்களினால் தீர்க்கப்படாது இருந்து வந்த காணி நிந்த பிரிவிடுதல் வழக்கு சமாதான சபை மூலம் தீர்க்கப்பட்டுள்ளது.

எண்பதாமாண்டு ஆரம்பிக்கப்பட்டு பொலிசார் - பொது மக்கள் சபையாக மாறி, பின் சமாதான சபையாக இயங்கி, அகில இலங்கையிலும் முதல் தரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இணுவில் சமாதான சபையே இப்பெருமையைப்பெற்றிருக்கிறது. தற்போது இருபது வழக்குகள் விசாரணையிலுள்ள இச்சபை இரண்டாயிரத்தெழுநூறு வழக்குகளைத் தீர்த்திருக்கிறது.

கோப்பாய், சுன்னாகம், பொலிஸ் பிரதேசத்திலடங்கும், இணுவில் உடுவில், சுன்னாகம், ஏழாலை, குப்பிளான், கோப்பாய், தாவடி, சங்குவேலி, முதலிய கிராமங்களை உள்ளடக்கியதாக இதன் விசாரணை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

காணித் தகராறு, குடும்பப் பிரச்சினை, கொடுக்கல் வாங்கல், விபதது, சண்டை சச்சரவு ஆகிய பல வழக்குகளில் சுமுகமான தீர்வு காணப்பட்டுள்ளது. பல துறைகளிலும் கைதேர்ந்தவர்கள் இருப்பதால் சட்ட அனுசரணையுடன் சமாதானத் தீர்வு காணமுடிகிறது. நீதிமன்றுபோற் செயற்பட்டாலும் இரு பக்கத்தாரும் ஏற்றுக் கொள்ளத் தக்க தீர்வு காணப்படுவதால் இதன் செயற்பாடு பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

## ஏகமனதான தெரிவு

(வவுனியா)

வவுனியா ஓமந்தை கிராமோதய சபைத் தலைவராக திரு. ஐ.கனகையா ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஓமந்தைப் பகுதியின் பல பொது நல அமைப்புக்களில் முக்கிய பொறுப்புகளை ஏற்று சமூகப்பணியாற்றி வரும் இவர், இலங்கை சோவியத் நட்புறவுச் சங்கத்தின் வவுனியா கிளையின் செயலாளரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வவுனியா (மாகாண) செய்தியாளருமாவார்.

வடபிரதேச போக்குவரத்துச் சபை:

## போதியளவு ஊழியர்கள் இருக்கின்றனர் ஆனால் உதிரிப் பாகங்களுக்கு தட்டுப்பாடு

வடபிராந்திய போக்குவரத்துச்சபையில் பிரயாணிகளின் நலன்கருதி சீரான சேவையை செய்யக்கூடிய ஊழியர்கள் இருந்தும்கூட உதிரிப்பாகத் தட்டுப்பாட்டினால் முழுமையான பஸ் சேவையை நடாத்த முடியாத நிலை உருவாகியிருப்பதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பல பகுதிகளுக்கான பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டும், சில பகுதிகளுக்கான பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டும் உள்ளன.

கோண்டாவில் டிப்போவைப் பொறுத்தவரையில் தற்பொழுது சுமார் 110 பஸ்கள் இருந்தும் கூட அவற்றில் 40 பஸ்கள் மட்டுமே சேவையிலீடுபடுத்தக்கூடிய நிலையிலுள்ளன. இதேபோன்று காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி சாலைகளிலும் மிகக் குறைந்தளவு பஸ்களே நாளாந்தம் சேவையிலீடுபடுத்தக்கூடிய நிலையிலுள்ளன.

தற்போது பல வீதிகளும் பாவனைக்கு உதவாத நிலையிலுள்ளதினால் அவற்றில் சேவையிலீடுபடும் பஸ்கள் விரைவில் சேதமடைகின்றன. இவற்றிற்கு தேவையான ரயர் மற்றும் உதிரிப்பாகங்களை தருவிப்பதில் பல தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன. மறுசீரமைப்புக்கென வடபிராந்தியத்திலிருந்து மதவாச்சி வேலைத்தளத்திற்கு அனுப்பப்பட்ட அநேகமான பஸ்கள் மீண்டும் இங்கு திரும்பி வரவில்லை. அத்தோடு பாதுகாப்பு படையினரின் பாவனைக்கெனவும் சில பஸ் வண்டிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதுதவிர அவ்வப்போது தோன்றும் டீசல் பற்றாக்குறைவும் பஸ் சேவைகளை ஒழுங்காக நடாத்துவதில் சிரமங்களை தோற்றுவித்துள்ளன.

இவ் இக்கட்டான நிலையினால் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் பொது மக்களின் தேவைக்கேற்றவாறு பஸ் சேவைகளை நடாத்த முடியாத நிலை உருவாகியுள்ளதாக சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து பஸ் வண்டிகளுக்கான உதிரிப் பாகங்கள் வந்து சேராவிடின் வடபகுதியில் பஸ் சேவைகள் முற்றாக சீர்குலையக்கூடிய அபாய நிலை தோன்றியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஆலய பரிபாலன சபை உதயம்

(நீர்வேலி)

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவிலில் இதுவரைகாலமும் தர்மகர்த்தா சபையே ஆலய நிர்வாகத்தை கவனித்து வந்தது.

கடந்த மாதம் நடைபெற்ற தர்மகர்த்தா சபைக் கூட்டத்தில் இச் சபையைக் கலைத்து ஆலய பரிபாலன சபை நிறுவுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இத் தீர்மானத்தின்படி இம் மாதம் 25ந் திகதி சனிக்கிழமை ஆலய மண்டபத்தில் ஆலய பரிபாலன சபை அங்குரார்ப்பண விழா இடம்பெறவுள்ளது.

## விவசாயிகள் கோரிக்கை

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் மிருக வைத்தியசாலையை முத்தையன் கட்டு வலதுகரை பஸ் நிலையத்திற்கு அருகில்உள்ள அரசாங்க கட்டடத்திற்கு மாற்றித் தரும்படி இப்பகுதி விவசாயிகள் கோரியுள்ளனர்.

தற்பொழுது ஒட்டுசுட்டானில் உள்ள மிருக வைத்திய நிலையம் அங்குள்ள இராணுவ முகாமுக்கு அருகில் அமைந்திருப்பதினால் கால்நடை வளர்ப்போர் அங்கு செல்லத் தயக்கம் காட்டிவருகின்றனர்.

மேற்படி மிருக வைத்திய சாலையை இடம் மாற்றுமாறு அண்மையில் முத்தையன்கட்டு திட்டக்குழுக் கூட்டத்திலும் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டு முல்லைத்தீவு அரசாங்க அதிபருக்கு மகஜர் அனுப்பப்பட்டுள்ளமைஇ ங்கு குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் பேச்சு

## எழுத்தினால் பெரும் புரட்சி ஏற்படுத்த முடியும்

(கிளிநொச்சி)

''எழுத்தாளன் என்பவன் உலகின் உயிர்நாடியாகத் திகழ்பவன். எழுத்தினால்பெரிய புரட்சிகளை ஏற்படுத்த முடியும். நம் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட வேண்டுமானால் அதை ஏற்படுத்த எழுத்தாற்றல் மிக்க சிறந்த சிந்தனையாளனால்தான் முடியும்.''

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனாப். எம். மன்சூர் கிளிநொச்சி கனிஷ்டமகாவித்தியாலயத்தில் நடைபெற்ற நீர்ப்பாசனத் திணைக்கள கிளிநொச்சிப் பிராந்தியத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் 'பேரருவி' சஞ்சிகை வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பேசும்போது கூறினார்.

அவர் மேலும் பேசும்போது, 'நீர்ப்பாசன திணைக்கள தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் இலக்கியப்பணி' மிகவும் வரவேற்கத் தக்கது. ஒரு நாடு முன்னேற விஞ்ஞானம் தற்போது இன்றியமையாததாகவுள்ளது. எனவே இவ்வாறான சஞ்சிகைகள் இலக்கிய விடயங்களை மட்டும் பிரசுரிக்காது விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட விடயங்களையும் வெளிக்கொண்டு வர வேண்டும்'' எனவும் தெரிவித்தார்.

இதழாசிரியரான சிவானந்த சர்மா பேசும்போது, ''இன்றைய சூழ்நிலையில் இவ்வாறான வெளியீட்டு விழாக்கள் அவசியம்தானா என்று பலர் வினவலாம். ஆனால் இப்படியான சூழ்நிலையில்தான் நூல்வெளியீட்டு விழாக்கள் அவசியம். நூல்கள், நூல்நிலையங்கள் எரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வேளை இது எமது எதிர்கால சந்ததியினருக்காக இன்னும் ஆயிரமாயிரம் நூல்கள் அவசியமாகிறது. பேனாமுனை ஒரு சிறந்த ஆயுதம். புரட்சி செய்வதற்கு மட்டுமல்ல எமது இலக்கியம் அழியாமல் பாதுகாக்கவும், அடுத்த சந்ததிக்கு வழிகாட்டவும் பயன்படுகிறது'' என்று கூறினார்.

இவ்வைபவத்தில் கிளிநொச்சி பிரதம நீர்ப்பாசனப் பணிப்பாளர் திரு. ம. சபாரத்தினம், பிரதம நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு. ச. சிவகுருநாதன், கிளிநொச்சி மாவட்ட கல்வியதிகாரி திரு. கே. சோமசுந்தரம், விலைக்கட்டுப்பாட்டதிகாரி திரு. கே.கே. மதிவதனன், நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு. ஏ. சி. விஜேந்தராஜா உட்பட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## 'குமுதினி'யின் சுக்கான் உடைந்தது; நெடுந்தீவு படகுச்சேவை மோசமான அவல நிலையில்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு குறிகாட்டுவான் பிரயாணிகள் படகுச் சேவையில் ஈடுபட்டுவந்த ''குமுதினி'' மோட்டார்ப் படகு 'சுக்கான்' உடைந்த நிலையில் குறிகாட்டுவான் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளது. தற்பொழுது ''மணிமேகலை'' மோட்டார் படகு சேவையை மேற்கொண்டுள்ளது.

இப்படகு இரும்பினால் ஆக்கப்பட்டுள்ளமையால் தொடர்ச்சியான பராமரிப்புகள் அவசியமான நிலையில் துருப்பிடித்துள்ள பகுதிகள் திருத்தப்பட வேண்டியுள்ளது. அவை நன்கு கவனிக்கப்படாத பட்சத்தில் மேற்படி படகும் பிரயாணத்திற்கு ஏற்றதாக அமையாமற் போகலாம். நெடுந்தீவு, குறிகாட்டுவான் படகுச்சேவை முற்றாகத் தடையாகலாம் என நெடுந்தீவு மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

படகின் நிர்வாகிகள். மக்கள் யாவரும் இது விடயத்தில் கவனம் செலுத்திப் படகுச் சேவையைத் தொடர்ந்தும் நடாத்த ஒத்துழைத்து வருவதுடன், அதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என அபிப்பிராயம் தெரிவித்தனர். இவ்விருபடகுகளும் இல்லாத நிலை ஏற்படுமெனில் வேறொரு படகு தற்போதைய சூழ்நிலையில் சேவைக்குக் கிடைக்கமாட்டாது.

## முறையீடு

''தமிழ்ப் பகுதிக்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் அண்மைக்காலமாக வருடா வருடம் இழுத்தடிக்கப்படுவதால் வருங்காலத் தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி பாழடிக்கப்பட்டு வருகிறது. கல்விச் சேவைக் குழுவின் தமிழ்ப் பிரிவு இந்தப் பிரச்சினைக்கு முகம்கொடுத்து இடமாற்றத்தை நேரகாலத்தோடு கையாள முடியாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. இதில் தலையிட்டு வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்தை உடனடியாகச் செய்து உதவுங்கள்.''

இப்படி பருத்தித்துறை பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வ. க. கணேசலிங்கம் கல்வி அமைச்சுக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்காவைக் கேட்டுள்ளார்.

## பாக். எதிரணி வலியுறுத்து

# பழைய அரசியல் சாஸனம் அமுலாகுதல் வேண்டும்

(இஸ்லாமாபாத்)

1973ம் வருடத்திய அரசியல் சாஸனத்தை மீண்டும் அமுல்படுத்த வேண்டும் என பதினொரு கட்சிகள் அடங்கிய ஜனநாயக மீட்பு இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது. லாகூரில் நடைபெற்ற இவ்வியக்கத்தின் கூட்டம் ஒன்றில் இக்கோரிக்கை வலியுறுத்தப்பட்டது. புதிய தேர்தல் ஒன்று நடத்தப்படவேண்டும் என்ற வேண்டுகோளும் இங்கு விடுக்கப் பட்டது.

லாகூரில் நடைபெற்ற கூட்டத்தில் பெரும் எண்ணிக்கையிலான எதிர்க்கட்சித் தலைவர்களும் சொற்பொழிவாற்றினர் என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க, முப்பத்து ஐந்து உறுப்பினர் காண்ட சமஷ்டி மந்திரிசபை ஒன்று பாகிஸ்தானில் அமைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

இங்கு இராணுவச் சட்டம் அகற்றப்பட்டதனையடுத்து தற்போது வெளிநாட்டில் உள்ள செல்வி. பெனுஸிர் பூட்டோ தான் பாகிஸ்தான் திரும்பப் போவதாக அறிவித்துள்ளார்.

இராணுவச் சட்ட அகற்றல் வெறும் தந்திரமே என்றும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

## பாரதத்தின் கட்டாயம்

(புதுடில்லி)

சில அண்டை நாடுகள் நவீன ஆயுதங்களில் அக்கறை கொண்டுள்ளதால், பாரதமும் நவீன ஆயுத உற்பத்தியில் ஆர்வம் காட்ட வேண்டிய கட்டாயம் உண்டாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பாரதத்தில் நேற்று தியாகிகள் தினம்

(புதுடில்லி)

பாரதத்தில் நேற்று தியாகிகள் தினம் கொண்டாடப்பட்டது. காந்திஜி கோட்ஸே என்ற கொடியவனால் கொல்லப்பட்டதும் குறிப்பிட்ட தினத்தில்தான். தொழுநோயாளர் மீது அவர் கரிசனை கொண்டிருந்ததால் தொழுநோயாளர் தினமாகவும் நேற்றைய தினம் அனுசரிக்கப்பட்டது. பல நல வாழ்வுத் திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டன.

சர்வமதப் பிரார்த்தனைகளும் புதுடில்லியில் நடாத்தப்பட்டன.

## ஜெயகாந்தனுக்கு கௌரவம்

(சென்னை)

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம் 1984-85ம் வருடத்துக்கான ராஜராஜன் விருதை பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கு வழங்கவுள்ளது. இது ஒரு இலட்சத்து ஒரு ரூபா ரொக்கமும் சான்றிதழும் கொண்டது.

## பாரதத்திற்கு காந்தி சிலை ரஷ்ய அன்பளிப்பு

(புதுடில்லி)

காந்திஜியின் முழு உருவகச் சிலை ஒன்று சோவியத் யூனியன் பாரதத்திற்கு அன்பளிப்புச் செய்யவுள்ளது.

குஜராத் சட்டசபைக்கருகே இச்சிலை அக்டோபர் இரண்டாம் திகதி நிர்மாணிக்கப்படும்.

பிரபல சோவியத் சிற்பியான ஜியால் பிச்சேவ் இதனை உருவாக்குவார்.

## பரபரப்பூட்டிய

# தஞ்சை பால குண்டுவெடிப்பு 10 பேர் கைது என அறிவிப்பு

(தஞ்சாவூர்)

தஞ்சாவூருக்கு அருகே குடமுருட்டிப் பாலம் வெடி வைத்துத் தகர்க்கப்பட்ட சம்பவம் தொடர்பாகப் பொலிசார் பத்துப்பேரைக் கைது செய்துள்ளதாக நேற்றுப் பிற்பகல் தெரிவிக்கப்பட்டது.

பன்னிரண்டு கிலோ மீற்றர் தொலையுள்ள இப்பாலம் நெடுகிலும் பொலிசார் ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இன்று தஞ்சாவூர் வரவுள்ள பிரதம மந்திரி இப்பாதையால் பயணம் மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகத் தெரியப்படுகின்றது.

## சலஞ்சர் விபத்து:

# அமெரிக்காவில் ஒரு வாரம் துக்கம் அனுஷ்டிக்கப்படும்

(வாஷிங்டன்)

விண்வெளிக்கலம் சலஞ்சர் விபத்துக்குள்ளானதையடுத்து ஒருவார துக்கப் பிரகடனத்தை ஜனாதிபதி திரு றொனல்ட் றீகன் அறிவித்துள்ளார்

பிரார்த்தனைக் கூட்டம் ஒன்றிலும் அவர் கலந்து கொள்ளவுள்ளார்.

சோவியத் தலைவர் திரு. கொர்பசெவ் சொந்த முறையில் தனது அனுதாபத்தைத் தெரிவித்து திரு. றீகனுக்குத் தந்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க, அத்லாண்டிக் கடலில் இக்கலத்தின் சில சிதைவுகள் மீட்கப்பட்டுள்ளன.

## விமான விபத்து

(மெக்ஸிக்கோ நகர்)

மெக்ஸிக்கோவில் நிகழ்ந்த விமானவிபத்து ஒன்றில் இருபத்தொரு பேர் கொல்லப்பட்டனர்.

## காந்திஜிக்கு பாப்பரசர் அஞ்சலி

(புதுடில்லி)

அடுத்த மாதம் பாரதம் வரும் இரண்டாம் பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் முதலில் மகாத்மா காந்தியின் சமாதிக்கு அஞ்சலி செலுத்துவார்.

## உடன்பாடு

(சென்னை)

பஞ்சாயத்துத் தேர்தலில் அ.தி.மு.கவும், இந்திரா காங்கிரஸும் உடன்பாடு செய்து கொண்டுள்ளன.

## முபாரக் கோரிக்கை

(கெய்ரோ)

"பயனுள்ள ஐ. நா. மாநாடு ஒன்று தேவை" என்று எகிப்திய ஜனாதிபதி முபாரக் கூறியுள்ளார்.

மேற்காசிய அமைதி முயற்சியில் ஐரோப்பாவின் பெரும் கடுபாடு தேவை என்றும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

## கைது

(காஷ்மீர்)

கிளர்ச்சி, பிரிவினை நடவடிக்கையில் ஈடுபட்டதாக ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், ஆயுதங்கள், வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

## ராஜீவ் இன்று தமிழ் நாடு விஜயம்

# இலங்கைத் தமிழரின் நிலை பற்றியும் பிரஸ்தாபிப்பார்?

(சென்னை)

பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி இன்று தமிழ்நாட்டிற்கு விஜயம் செய்கிறார்.

திருவையாறு தியாகராஜ பிரம்ம ஆராதனையில் அவர் கலந்து கொள்வார். இது தியாகராஜபிரம்ம 139 வது ஆரம்ப விழாவாகும்.

தென்மண்டல கலாச்சார நிலையத்தையும் அவர் திறந்து வைப்பார். இன்று காலை அவர் தஞ்சாவூர் வருகிறார்.

இது இவ்வாறு இருக்க, இலங்கை இனப் பிரச்சினை அதி முக்கிய கட்டத்தை தற்போது அடைந்துள்ளதால் பிரதம மந்திரியிடம் செய்தியாளர் அணுகும்போது அவர் கூறப்போகும கருத்து வெகு ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

கைதடியில் பனைவள அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையத்துக்கு இன்று அடிக்கல் நாட்டப்படுவதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது:

# பனை அபிவிருத்திச் சபையும் அதன் செயற்பாடுகளும்

எமது பிரதேசத்தின் அதி முக்கிய மூலவளமான கற்பக தருவையும், அதன் பயன்பாடுகளையும், அதனால் பயன்பெறும் இலட்சக்கணக்கான மக்களையும் பற்றி அனைவரும் சிந்தித்து செயலாற்றும் காலமிது.

இந்நாட்டில் 60,000 ஏக்கரில் 10 மில்லியன் பனைமரங்கள் இருப்பதாகக் கணக்கிடப் பட்டுள்ளது. யாழ் மாவட்டத்தில (கிளிநொச்சி உட்பட) 7 மில்லியன் பனை மரங்களும் மன்னார் முல்லைத்தீவுப் பகுதிகளில் அடர்த்தியாகவும், திருகோணமலை, புத்தளம், வவுனியா, அம்பாந்தோட்டைப் பகுதிகளில் அடர்த்தி குறைந்தளவிலும் பனைமரங்கள் காணப்படுகின்றன இப்பனைவளத்தை அடிப்படையாகக் கொண்டு பனை அபிவிருத்திச் சபை ஐந்து பிரதான நோக்கங்களைக் குறிக்கோளாக வைத்து செயல் பட்டு வருகின்றது.

1. பனைவளத்தைப் பெருக்குதலும், உற்பத்தித்திறனை அதிகரித்தலும். 2. பனம் உற்பத்தியை ஊக்குவித்தலும் வினமயப்படுத்தலும். 3. உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்து சர்வதேச ரீதியில் சந்தைப் படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். 4. உற்பத்திப்பொருட்களின் நீண்டகால ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் பொருட்டு ஆராய்ச்சி நிலையமொன்று நிறுவுதல். 5. உற்பத்திகளை ஊக்குவிற்பதற்கான தொழில் நுட்ப வழிகாட்டலும், ஆலோசனைகள், பயிற்சிகள் வழங்கல்.

இக்குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் சபையின் உற்பத்திப் பிரிவு, அபிவிருத்திப்பிரிவு, சந்தைப்படுத்தும் பிரிவு நிர்வாகப் பிரிவு என்பன இயங்குகின்றன.

பனம்பழம், பனையோலை பனைமரம், பனந்தும்பு போன்றவற்றிலிருந்து மேற்கொள்ளக்கூடிய தயாரிப்புக்கள் அனைத்தையும் உற்பத்திப் பிரிவும், இலங்கையின் எந்தெந்தப் பிரதேசங்களில் எந்தளவு தொகை பனம் விதைகளைப் புதிது புதிதாக நாட்ட முடியுமோ அவ்வளவு பனம் விதைகளை நாட்டிப் பனைமரச் செய்கைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் பணியை அபிவிருத்திப் பிரிவும், பனம் பொருள் உற்பத்திகளை பல்வேறு இடங்களிலிருந்து கொள்வனவு செய்து நாட்டின் பல பாகங்களுக்கும் விற்பனை செய்து உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் துறையில் சந்தைப் படுத்தும் பிரிவு அதன் 'கற்பகம்" விற்பனை நிலையங்கள் ஊடாகச் செயற்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

இப்பிரிவுகளுடன் பனை அபிவிருத்தியின் விசேட முன்னேற்றம் கருதி ஆரம்பிக்கப்பட்டதே ஆராய்ச்சிப் பிரிவாகும். ஆராய்ச்சிக்காக பாரியளவில் திக்கம் என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட கட்டிடம் கலக்கிரமத்தில் 'பல்தொழில் தொகுப்பு' Indestrial Complex நிலையமாக மாற்றப்பட்டு செயல்படத் தொடங்கியது.

எனவே, கைதடியில் இப்பாரிய ஆராய்ச்சி நிலையத்தை நிர்மாணிக்கும் முடிவு சம்பந்தப்பட்ட பல அறிஞர்களின் சிபார்சுக்கமைய ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் உலக உணவு விவசாய நிறுவனத்தின் அனுசரணையுடன் எடுக்கப் பெற்றது.

இதனை நிறைவேற்றும் பணியில் பிரதேச அபிவிருத்தி அமைச்சும், பனை அபிவிருத்திச்



சபையும் இணைந்து துரிதமாகச் செயல்பட்டு வருகின்றது.

சுமார் ஒன்பது மாதங்களுக்குள் இக்கட்டடம் பூர்த்தியாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து அடுத்த இருகட்டமாக பாரிய இரு கட்டடங்கள் அமைக்கப்பட்டு நாளடைவில் முழுமையான, சகல வசதிகளையும் கொண்ட தலைமைக்காரியாலயமாக இது அமையும்.

தமிழ் பிரதேசத்தில் தலைமைக்காரியாலயத்தைக் கொண்ட ஒரேயொரு சட்ட முறைத்தாபனம் எமது சபையாகும்.

இப்பாரிய சபையில் தலைமைப் பதவியை ஏற்றுக் குறுகிய காலத்திற்குள் சபையின் செயற்பாடுகளை சரியான திட்டங்களுடன் செயல்படுத்தி வருகின்றோம். மக்கள் எம்மீது கொண்ட நம்பிக்கை வீண் போகாமல் குறுகியகால, நீண்டகாலத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றோம்.

தொடர்ந்தும் மக்களின் ஒத்துழைப்பை நாம் நாடிநிற்கின்றோம்.

க. நடராசா:
தலைவர்.
பனம் பொருள்
அபிவிருத்திச் சபை.

## வடகோவைக் கண்ணகி

கொடுங்கோலே கோவலனைக் கொன்றதொரு செயலை
கலங்காமற் பத்தினியாள் கட்டுரைத்தாள் - இலங்கும்
வாழை வளங் கொழிங்கும் வடகோவைக்கண்ணகியாள்
ஏழைகளுக் கீவாள் அருள்.

வடகோவை - திருப்பதி

(வடகோவை கண்ணகையம்மன் கும்பாபிஷேகத்தை யொட்டி பிரசுரமாகின்றது)

ஈழமுரசு

## யாழ். ஆஸ்பத்திரியில் இரண்டு 'எக்ஸ்றே' கருவிகள் செயலிழப்பு

யாழ். அரசினர் வைத்திய சாலையிலுள்ள மூன்று எக்ஸ்கதிர் படப்பிடிப்பு கருவிகளில் இரண்டு செயலிழந்துள்ளன. இதனால் இங்கு மிக அவசர நோயாளிகள் தவிர்ந்த ஏனையோருக்கு எக்ஸ்றே படப்பிடிப்பு வேலைகளை மேற்கொள்ளமுடியாத நிலை உருவாகியுள்ளது. பழுதடைந்த இருகருவிகளையும் திருத்துவதற்கு கொழும்பிலிருந்தே தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் வரவேண்டியிருப்பதாகவும் அவர்கள் யாழ்ப்பாணம் வர தயக்கம் காட்டுவதாகவும் அறியப்படுகின்றது. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு ஒதுக்கப்பட்ட அம்புலன்ஸையும் இங்கு அனுப்ப கொழும்பு அதிகாரிகள் மறுத்துள்ளது தெரிந்ததே.

### சென்னையில் விடுதலைப்புலிகள் அறிவிப்பு

# மன்னர் தாக்குதலில் பதினறு ராணுவ சிப்பாய்கள் மரணம்

(சென்னை)

**மன்னாரில் நேற்று முன்தினம் இராணுவத்துக்கும் போராளிகளுக்குமிடையில் இடம் பெற்ற நேரடி மோதலில் பதினறு ராணுவச் சிப்பாய்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது**

இச்சம்பவத்தின்போது பெரும் தொகையான மக்களின் கடைகள், வீடுகள் எரிக்கப்பட்டதாகவும், மேலும் பல வீடுகள் குண்டு வீச்சினல் சேதமடைந்ததாகவும் இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் ஹெலிகப்டர், விமானம் ஆகியவற்றிலிருந்து குண்டுகளை வீசிய தாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இவ்வறிக்கையில், பரப்பக்கடந்தான் என்ற இடத்தில் சுமார் பன்னிரண்டு மணி நேரமாக இம் மோதல் இடம் பெற்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வவுனியாவில்ஹோட்டல்முதலாளிக்குச்சூடு; படையினர் நகருள் புகுந்து அட்டகாசம்

(வவுனியா)

வவுனியா நகரில் சிங்கள வர்த்தகர் ஒருவர் சுடப்பட்டதையடுத்து நேற்று வவுனியா நகர் ஸ்தம்பிதமடைந்தது. கடைகள் உடனடியாகவே இழுத்து மூடப்பட்டன. நகரில் சனநடமாட்டம் குறைந்தது.

நேற்றுக் காலை 8-30 மணிபோல் கடைவீதியிலுள்ள அம்பலாங்கொடை ஹோட்டல் உரிமையாளர் ஜெயரட்ண (30) சில இளைஞர்களால் சுடப்பட்டார். தலையிலும், மார்பிலும் படுகாயமடைந்த இவர் வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து தச்சன்குளம் இராணுவ முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டார். பின்னர் இவர் ஹெலிகப்டர் மூலம் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

இதனையடுத்து நகரில் தொடர்ச்சியாக கேட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தங்களையடுத்து நகரமே ஸ்தம்பிதமடைந்தது. பஸ்களில் வந்தவர்கள் கச்சேரிக்கு முன்னாலும், மன்னார் வீதிச் சந்தியிலும் வைத்து தாக்கப்பட்டார்கள். சிலர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டார்கள். இராணுவத்தினரும் பல மணி நேரம் நகரில் காணப்பட்டார்கள். நகரில் மினிபஸ்களோ, வாகனங்களோ காணப்படவில்லை.

### அகதிகளுக்கு வேண்டுகோள்

வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களைத் தங்கள் தங்கள் கிராமங்களிலுள்ள பிரஜைகள் குழுச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் கேட்டுள்ளது.

**முகமூடி....**

டோரில் சிலரின் விபரம் வருமாறு:

சோமசுந்தரம் சின்னராசா (வாடகைக் கார் சாரதி), ஜெகன் (தேங்காய் வியாபாரி), தச்சன் குளத்தை சேர்ந்த துரைசாமி பாஸ்கரன் (பத்திரிகை ஏஜென்ட்), தெற்கு இலுப்பைக் குளத்தை சேர்ந்த பத்மநாதன் செல்வமனோகரன், கோயில் புதுக்குளத்தை சேர்ந்த இராதா என அழைக்கப்படும் குமாரசாமி கமலானந்தன் (குளோப் என்ரபிறைஸ் ஊழியர்), மன்னார் வீதி 4ம் கட்டையை சேர்ந்த இரட்ணசபாபதி லோகராசு (மினிபஸ் ஆள் சேர்ப்பு ஊழியர்), பிரபல அரச ஒப்பந்தகாரர் இராஜரட்ணம், அவரது உதவியாளர் யோகன், நெலுக்குளத்தை சேர்ந்த வரதன், அதேயிடத்தை சேர்ந்த இராஜா, புளியங்குளம் பட்டாணிச் சந்தியை சேர்ந்த சகாப்டீன், லோகேஸ்வரன், மற்றும் ஒரு மாணவன் இவர்களைத் தவிர வேறுபலரும் கைதாகியிருக்கலாம் என கருதப்படுகின்றது.

**ரயிலில்...**

தெரியாதவர்கள் புகைவண்டியை மல்லாகம் நிலையத்தில் வைத்து மறித்திருந்தனர். அதில் கூட்டுத்தாபனத்திற்கு உபயோகப்படும் பேண் ஒயிலும், எரிபொருள் வெறும் பவுசரும் இருப்பது விசாரணையில் தெரியவந்தது. ஆயுதமுனையில் வண்டி சுன்னகம் நிலையத்தைநோக்கிச் செலுத்தப்பட்டு லூப்பில் விடப்பட்டது.

சாரதி முதலானோர் ஆயுதமுனையில் வைக்கப்பட்டிருந்தனர். "கோஸ்"பைப்பின்மூலம் பரல்கள் நிறைக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டன. பின் இரு பவுசர்கள் கொண்டுவரப்பட்டு வாட்டர்பம்மின்மூலம் வெளியேற்று வேலைகள் நடைபெற்றன.

**சீமெந்து....**

தாபனத்திற்குச் சொந்தமான ட்ராக்டர் ஒன்றும் நேற்றிரவு பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்குச்சொந்தமான கழித்தொதுக்கப்பட்ட பவுசர் ஒன்றும் கடத்தப்பட்டதே இதன் காரணங்கள் என அறியவருகிறது.

கடத்தல் நடவடிக்கை பற்றி விசாரிக்க வந்த பாதுகாப்புப் படையினர் வேலைத்தல முகாமையாளரை விசாரணையின் பொருட்டு முகாமுக்குக் கொண்டுசென்றனர். இச்சம்பவத்தால் தொழிலாளர்களும், ஊழியர்களும் வேலைக்குச் செல்லாததால் வேலை பாதிப்படைந்து வீதிகள் வெறிச்சோடி இருந்தன. நண்பகலுக்குப்பின் நிலைமை சீரடைந்தது.

### திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை துர்க்காபுரம் மகளிர் இல்லப் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம், யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. சு. வித்தியானந்தன், சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி முதலானோர் இதில் கலந்து கொள்வர்.

### ஆகாயவேட்டு மக்கள் ஓட்டம்

(ஏழாலை)

நேற்று முற்பகல் பத்துமணியளவில் பலாலி, கட்டுவன் பகுதிகளில் ரோந்திலீடுபட்ட ஹெலிகப்டரிலிருந்து தீர்க்கப்பட்ட சூடுகளினல் அயற்கிராமங்கள் வெகுவாகப்பாதிக்கப்பட்டன.

இதுவரை கேட்காத அளவில் கேட்ட சூட்டுச் சத்தங்களினல் மக்கள் பாதுகாப்புத் தேடி ஓடினர். காங்கேசன்துறை வீதியில் நின்ற மக்களும், வாகனங்களும் தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் தஞ்சமடைந்தனர். அங்கும் இக்கட்டான நிலை தோன்றியது.

**அரசியல்**

ஒரே நேரத்தில் இவைபெற முடியும் அல்லது தோல்விபெறலாம் என்றும் அவர் குறிப்பிட்டதாகவும், வன்முறையைக் கைவிட்டால் தமிழர் விடுதலைக் கூட்டணியினருடனே, பிற பிரிவினருடனே தான் பேசத் தயாராக இருப்பதாகக் கூறியதாகவும் மேற்படிப் பேட்டியை மேற்கோள் காட்டி யு. என். ஐ. தெரிவித்துள்ளது.

**ஹெலிகப்டர் மூலம்...**

குதலைத் தொடர்ந்து முல்லைத்தீவு நேற்று வெறிச்சோடிக் காணப்பட்டது. அடிக்கடி குண்டு வெடிப்புச் சத்தங்களும் கேட்டதாகத் தெரியவந்துள்ளது.

## மலையகநிலை; கூட்டணிகவலை!

(சென்னை)

மலையக மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகள் குறித்துத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொலிட்பீரோ கண்டனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் எல்லா இடங்களிலும் தமிழரின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பில்லை என்பதை இது வெட்ட வெளிச்சமாகக் காட்டுகிறது என்றும் அது தெரிவித்துள்ளது.

மலையகத்தில் எள்ளளவும் வன் முறையைத் தூண்டும் ஏதும் நடவடிக்கையில் தமிழர் ஈடுபடவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

## கடலில்வைத்து மீனவர்மீது கடற்படையினர் சுட்டனர்

(வண்ணார்பண்ணை)

செவ்வாய்க்கிழமை இரவு தலைமன்னார் கடல்மார்க்கமாக படகொன்றில் வந்த ஆயுதப் படையினர். துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர். பின்னர் கரையில் வந்திறங்கி அங்கு கடற்றொழில் செய்து கொண்டிருந்த மீனவர்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் வயிற்றில் சுடப்பட்ட மீனவர் அன்ரனிபோல் (32) மன்னார், நேற்று யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவசர சத்திர சிகிச்சை மேற் கொள்ளப்பட்டது.

வயிற்றின் முன் பகுதியால் சென்ற குண்டு பின்பகுதியால் வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

### அலங்கார உற்சவம்

சுழிபுரம் கம்பனை ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மன் கோவில் அலங்கார உற்சவ இறுதித் தினத்தை முன்னிட்டு இன்று காலை அம்பாளுக்கு சங்காபிஷேகமும், விசேடபூசைகளும், நடைபெறும்.

மாலை விசேட பூசைகளும் அம்பாள் முத்துச்சப்பரத்தில் வீதி வலம் காட்சியும் இடம்பெறும்.

**துண்டுதுண்டாக....**

குச்சட்டம் இன்று காலை ஏழு மணிக்கு ரத்தாகும்.

கடந்த மூன்று தினங்களில் 35 கடைகள் தீக்கிரையானதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. ஆனால் இத்தொகை எண்பதுக்கும் அதிகமென அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

நுவரெலியா மாவட்டத்தில் மட்டும் சுமார் 70000 தொழிலாளர்கள் தோட்டங்களுக்கு வேலைக்குச் செல்லவில்லை.

அமைச்சர் அத்துலத்முதலி, இ. தொ. க. பொதுச் செயலர் திரு எம். எஸ். செல்லச்சாமி உட்பட மற்றும் பல அதிகாரிகள் சகிதம் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு நேற்று விஜயம் செய்து சமாதான சபைகளை உருவாக்கினர்.

**மலயக மக்கள் ...**

கரங்களுக்குள் மத்திய பிரதேச சுதேச மக்களின் நிலங்கள் சென்றடைந்துவிடும் என்றார்.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கலவான எம். பி. திரு. சரத்முத்தெட்டுவேகம உரையாற்றுகையில், மலையக மக்களை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசும், ஐக்கிய தேசியக் கட்சி அரசும் ஆரம்பம் முதலே சுரண்டி வந்துள்ளதாகத் தெரிவித்தார்.

### வழமைபோல நேற்றுவேலை

(சுண்டுக்குளி)

அன்னையர் முன்னணியினரின் மறியல் போராட்டம் காரணமாக ஆறு தினங்களாக ஸ்தம்பித்திருந்த யாழ். அரச செயலகம் புதன்கிழமை மறியல் போராட்டம் கைவிடப்பட்டதையடுத்து நேற்று வழக்கம்போல் செயற்படத் தொடங்கியது. காலையிலிருந்து பொதுமக்கள் அதிகமானோர் செயலகத்தில் காணப்பட்டனர்.

### காஸ் சிலிண்டர் முகாமில் தடுப்பு

கொழும்பிலிருந்து லொறி ஒன்றில் கொண்டுவரப்பட்ட சமையல் காஸ் சிலிண்டர்கள் லொறியுடன் சேர்த்து ஆனையிறவு தடை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த 200 காஸ் சிலிண்டர்களும் யாழ். நகரத்திலுள்ள வாடிக்கையாளர்களுக்கு விநியோகிக்கவென இங்குள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றால் தருவிக்கப்பட்டவையாம்.

**செயலகத்துக்கு....**

கிழமை முதல் செயலகம் முன்னல் மறியல் நடைபெற்றதால், விநியோகிக்கப்படாத கடிதங்களே இவ்வாறு ஒன்றாக நேற்று வந்தன. ஒவ்வொரு பையிலும் சராசரியாக ஐநூறு கடிதங்கள் உள்ளன.

**மாங்குளம்....**

யைத் தோண்டி எடுத்தனர்.

கண்ணிவெடிகளில் ஒன்றை அவ்விடத்தில் வைத்தே வெடிக்கவைத்த படையினர் மற்றைய கண்ணிவெடியை இராணுவ முகாமிற்கு எடுத்துச் சென்றனர்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 31 - 01 - 86 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336